www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்

## LIBERATION TIGERS OF THAMIL EALAM

27-5-83



உமைகுமாரன்



இறைகுமாரன்

தமிழீழத் தாயகத்தின் அடிமைத்
தளையறுக்கப் போராடி
உயிரும் உடலும் தமிழ் மண்ணுக்கே
தந்திட்ட
அருமைத் தோழர்களே
உமைகுமாரா! இறைகுமாரா!
ஆக்கிரமிப்பு சிறீலங்கா அரசை
தமிழீழ மண்ணை விட்டுத் துரத்திட வேண்டும்
அடக்குமுறை ஆயுதப் படைகளின்
இடுப் பொடித்திட வேண்டும்
சுரண்டலற்ற அரசு
தமிழீழ மண்ணில் மலர்ந்திட வேண்டும்
இதுதானே உங்கள் ஆசை! இதுதானே உங்கள் கனவு!
இதற்குத் தானே உங்கள் இனிய வாழ்வை
பலியிட்டீர்கள்;
இதோ நாங்கள் இருக்கின்றோம்
தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கின்றோம்
தமிழீழ மண்ணில் இருந்து எதிரிப் படைகளை
ஓடோட விரட்டிடுவோம்!
விடுதலைப் போரின் முதற்கட்டம்
கெரில்லா யுத்தம்
அது இன்று தொடர்கிறது.
அதன் இறுதிக் கட்டமாக
ஆயுதப் புரட்சி வெடிக்கும்
மக்கள் போராட்டம் சீறிக் கிளம்பும்
சிறீலங்கா அரசு தறிகெட்டு ஓடும்
சமதர்ம தமிழீழ நாடமையும்
இந்த உங்கள் இலட்சியக் கனவை
நனவாக்காமல் நாம்
ஓய்ந்திருக்க போவதில்லை!
ஓரடி பின்வாங்கப் போவதுமில்லை!
உங்கள் உயிர்ப்பலி வீண்போகாது
இது உறுதி! இது உறுதி! இது உறுதி!

வெல்க தமிழீழம்!
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!

வே. பிரபாகரன்
தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகள்.

அரசியற் குழு
தமிழீழ விடுதலைப் புலிகள்

✱ எமது இயக்கத்தின் உறுதியான ஆதரவாளர்கள், 26-5-82 இரவு சமூக விரோதிகளினால் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்கள் மறைந்த முதலாவது ஆண்டு நினைவை முன்னிட்டு இப்பிரசுரம் வெளியிடப்படுகிறது.

---

வெளியீடு:- பிரச்சார வெளியீட்டு வாரியம், தமிழீழ விடுதலைப் புலிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்